# அரசியலும் விமர்சனமும்

**2015ல் சனாதிபதித் தேர்தலின்போது தற்போது ஆட்சியிலுள்ள கூட்டு எதிரணியினர் வாக்களித்த தமிழர் பிரச்சினைக்கான தீர்வின் நிலைமை என்னவாகும் -** அடிபட்டுப் போகும் சாத்தியம் காணப்படுகின்றது

**பிணைமுறிவு பிரச்சினை தேசிய அரசினை இல்லாதாக்குமா?** உள்ளூராட்சி தேர்தலினால் கட்சிகள் தங்கள் வெற்றிக்காக மும்முரமான பிரச்சாரம் பிணைமுறிவு பிரச்சினையை முக்கிமாக முன்வைக்கப்பட்டு ஈடுபடுவதினால் தேசிய எண்ணம் அடிபட்டுபோவது சாத்தியமாகலாம். **தேசிய அரசு உடைந்தால் தமிழர் சார்பான தீர்வு நகர்வும் நின்றுவிடும்.** நான்கு கட்சிகள் களமிறங்கியுள்ளதால் அனேகமான சபைகளில் தேசிய அரசின் பங்காளிக் கட்சிகள் ஒன்றினைந்தாலே உள்ளூராட்சி சபைகளில் ஆளும் அந்தஸ்தை பெறமுடியுமென நிலைமை தோன்றினால் அல்லது ஐ.தே.க. கூடிய சபைகளில் வெற்றி பெற்றால் மட்டும் மத்தியிலும் தேசிய அரசு தொடரும். சுதந்திரக் கட்சி கூடிய சபைகளில் வெற்றி பெற்றால் தேசிய அரசு நிலைக்காது. சுதந்திரக் கட்சி தனித்து செயற்பட முற்படும்.

**சுதந்திரக்கட்சி பொதுசன பெரமுன கூட்டணியுடன் (ராஜபக்ஜ அணி) கூட்டு வைப்பது சாத்தியமா?** சில மாதங்களுக்கு முன்னர் அது சாத்தியமாக இருந்திருக்கலாம். இரண்டு கட்சியினரும் மூன்று போர்கள் கொண்ட பிரதிநிதிகளை வைத்து பேசியிருந்தார்கள். இப்போ சுதந்திரக்கட்சியினர் தாங்கள் ஊழலற்றவர்கள் என்றும் பெரமுனவும் ஐக்கிய தேசியக் கட்சியும் தான் கள்ளர்கள் எனக் கூறிவருவதினால் இனிமேல் இணையச் சாத்தியமில்லை.

**ஜே.வி.பி. வேறு கட்சியினருடன் கூட்டு வைப்பார்களா?** உள்ளூராட்சி தேர்தலில் ஓரளவு நல்ல வெற்றி கிடைக்குமானால் எவருடனும் கூட்டுச் சேரமாட்டார்கள். சிறப்பான வெற்றி கிடையாது போனால் ஊழலுக்கு பெயர் எடுத்த பொதுசன பெரமுன கட்சியைவிட்டு மற்றைய இரு கட்சியுடனும் கூட்டுச் சேர வாய்ப்புண்டு.

**சுதந்தரக்கட்சி குட்டித் தேர்தலில் வென்றால் நிலைமை என்னவாகும்?** .புதிய அரசியவமைப்பும் அதனால் தமிழர் பிரச்சினையில் தீர்க்கப்பட எடுக்கப்பட்ட

முயற்சிகளும் இடைநிறுத்தப்பட்டு அரசியல் அமைப்பில் சில திருத்தங்கள் மட்டும் மேற்கொள்ளப்படும். சுதந்திரக் கட்சியினருக்கு தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதில் அக்கரையில்லை. அக்கட்சியில் சந்திரிக்காவும் அவரின் சகாக்களுமே தமிழர் பிச்சினையை தீர்க்க முன்னிற்கிறார்கள்.

**ஐக்கிய தேசியக்கட்சி தனித்து வென்றால் நிலைமை என்னவாகும்**. மத்தியில் கூட்டுத் தொடரும். தேசிய அரசும் தொடரும். தமிழர் பிரச்சினைத் தீர்வுக்கு சுதந்திரக் கட்சியும் ஆதரவளிக்க வாய்ப்புண்டு.

**தமிழ் தேசிய கூட்டமைப்பின் தீர்வு கிடைக்கும் கனவுக்கு என்ன நடக்கும்?** தீர்வுக்கான பாதையில் அரைவாசித் துூரம் சென்றடைந்ததாக தெரிவிக்கும் த.தே.கூட்டமைப்பினர் ஐ.தே.க.வின் பிணைமுறி பின்னடைவால் கவலையடைந்துள்ளார்கள். தமிழர் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமென சனாதிபதி தேர்தலில் எதிரணிக் கூட்டணி உருவாகும்போது முன்னின்றவர்கள் சோபித தேரர் சந்திரிக்கா ராஜித சேனாரத்ன ரணில் ஆகியோரே. மைத்திரிபால சிறிசேன சுதந்திரக் கட்சியிலிருந்து பிரித்து இழுத்தெடுக்கப்பட்டவர். அது மஹிந்த ராஜபக்ஷாவை தோற்றடிப்பதற்காக மட்டும்தான். இத்தேர்தலில் ஐ.தே.க. 75 % சபைகளில் வெற்றி பெற்றால் தேசியக் கூட்டு தொடரும். தமிழர் பிரச்சினைக்கு ஒரு தீர்வு கிடைக்க வாய்ப்புண்டு.

**மைத்திரிபால சிறிசேனாவின் அரசியல் போக்கு என்ன?** எப்படியும் சுதந்திரக் கட்சியை பலப்படுத்தி ஆட்சியைப் பிடிக்க வேண்டும். அவரின் கட்சிக்கு மூன்றில் இரண்டெல்லாம் தேவையில்லை. தேசிய அரசும் தேவையில்லை. புதிய அரசியலமைப்பும் தேவையில்லை. சட்டங்களை இயற்றக்கூடிய சாதாரண பெரும்பான்மை இருந்தால் போதும். சுதந்திரக்கட்சி அரசாள வேணும் அவ்வளவுதான். தமிழர் கரிசனை அவருக்கிருப்பதாக காட்டுவது சுத்த அரசியல். அவரின் கையாளராக தற்போது விளங்கும் சுசில் பிறேம் ஜயந்த சனாதிபதி தேர்தலின் போது ராஜபக்ஷாவை ஆதரித்தவர். அவர் பேசிய கூட்டங்களில் சிறுபான்மையினரின் வாக்குகள் தங்களுக்கு தேவையில்லை என முழக்கமிட்டவர்.

மைத்திரிபால சிறிசேனவின் தற்போதைய ஊழல் எதிர்ப்புத் தீவிரம் ஐ.தே.க. இத்தேர்தலில் வெல்லுவதை தடுப்பதற்காகவே. சில காலத்திற்கு முன்னர் ஒரு பக்கம் ஊழலுக்கு எதிரானவர் எனக் காட்டிக் கொண்டு மறுபக்கம் தனது சுதந்திரக் கட்சி அமைச்சர்கள் ஊழல் குற்றச்சாட்டுக்களுள்ள ராஜபக்ஷ அணியினருடன் இணைப்பு பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்ததை அனுமதித்திருந்தார். ஏன் சென்ற பாராளுமன்ற தேர்தலில் தான் மேடைக்கு

மேடை தாக்கிப் பேசி தோற்கடித்த ராஜபகஷாவை தனது கட்சியில் குருணாகல்லில் போட்டியிட விட்டவர். அதுமட்டுமல்ல மஹிந்தா ஊழல் செய்த காலங்களில் (2008 – 2014) அவரின் அரசோடு இருந்து அமைச்சா் பதவி வகித்தவர் மட்டுமல்லாமல் ஆண்ட கட்சியின் செயலாளராகவும் பணியாற்றிக் கொண்டு இருந்தவர். அந்த ஆட்சியில் கொண்டு வரப்பட்ட மோசமான 18வது திருத்தச் சட்டத்தை ஆதரித்து ஏற்றுக் கொண்டு அரசில் இருந்தவர். அவர் கட்சியிலுள்ளவர்களின் ஊழல் செயல்களை எதிர்த்து தனது பதவிகளைத் துறந்து கட்சியை விட்டு வெளியேறியவரல்ல. ரணில் சந்திரிக்காவால் இழுத்து வெளியே எடுக்கப்பட்டவர். இழுத்தெடுக்காவிட்டிருந்தால் இன்றும் அவர்களுடனேயே இருந்திருப்பார். அவர் கட்சி நலனையே முக்கியமாக கருதுபவர். இனப்பிரச்சினை தீர்வு நாட்டின் அபிவிருத்தி கட்சி நலனுக்கு அடுத்தபடியாகத்தான்.

**சந்திரிக்காவின் நிபைப்பாடு என்ன?** மெல்லவும் முடியாது துப்பவும் முடியாது இரண்டும் கெட்டான் நிலைமை. ஐயம்பதி விக்கிரமரட்னாவைக் கொண்டு தமிழர் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண ரணிலோடு சேர்ந்து முனைகின்றார். சுதந்திரக் கட்சியின் முழு ஆதரவு அவருக்கில்லை. தனது தந்தையாரின் சுதந்திரக் கட்சியை விட்டு வெளியேறவும் முடியாத நிலைமை. ராஜித சேனரட்ன அர்ஜுன ரணதுங்க ஆகியோர்கள் சுதந்திரக் கட்சியிலிருந்து விலகி ஐ.தே.க. வை ஆதரித்துக் கொண்டிருப்பவர்கள்.